கோவை: இரண்டு வயது குழந்தை, எச்.ஐ.வி., தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கோவை மருத்துவக் கல்லுாரி மருத்துவமனை மீது புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.திருச்சி தம்பதிக்கு, அங்குள்ள அரசு மருத்துவமனையில், 2017 மார்ச், 6ல், இரட்டை குழந்தை பிறந்தது. பெண் குழந்தையை, 'இன்குபேட்டர்'ல் சிகிச்சை அளித்து, 32 நாட்களுக்கு பின் வீட்டுக்கு அனுப்பினர். குழந்தையின் தந்தை, திருப்பூரில் பணிபுரிந்து வரும் நிலையில், 2018, ஜூலை, 11ல், காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குழந்தையை, திருப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.பரிசோதித்த டாக்டர்கள், இருதய நோய் இருப்பதாக கூறி, கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். கோவை அரசு மருத்துவமனையில், குழந்தைக்கு, டாக்டர்கள், 12ம் தேதி ரத்தம் ஏற்றி, ஓரிரு நாளில் வீட்டுக்கு அனுப்பினர். இந்நிலையில், தற்போது, குழந்தை, எச்.ஐ.வி., தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக, புகார் எழுந்துள்ளது.குழந்தையின் தந்தை கூறியதாவது:மருத்துவமனையில், என் குழந்தைக்கு ரத்தம் ஏற்றும் போது, அதை பாதியிலேயே நிறுத்தி விட்டனர். டாக்டர்களிடம் கேட்டபோது, வயதானவரின் ரத்தத்தை, மாற்றி ஏற்றி விட்டோம் என கூறினர். பின்னர் சிகிச்சை முடிந்ததாக கூறி, மறுநாளே, வீட்டுக்கு அனுப்பினர்.கடந்த, 8ம் தேதி, குழந்தையின் உடலில் கட்டிகள் உருவானதால், கோவை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். குழந்தையின் ரத்தத்தை பரிசோதித்து, எச்.ஐ.வி., தொற்று உள்ளதாக கூறினர். என்னையும், மனைவி, ஆண் குழந்தையையும் பரிசோதித்து, எச்.ஐ.வி., தொற்று இல்லை என்பதை உறுதி செய்தனர். திருப்பூர், திருச்சி, கோவை அரசு மருத்துவமனையை தவிர, வேறெந்த மருத்துவமனையிலும் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கவே இல்லை. திருப்பூர் துணை சுகாதார நிலையத்தில் மட்டும், ஒரு தடுப்பூசி போட்டுள்ளோம். கோவை அரசு மருத்துவமனையில், ரத்தம் ஏற்றியதால் தான், என் குழந்தைக்கு எச்.ஐ.வி., தொற்று ஏற்பட்டுள்ளது. ரேஸ்கோர்ஸ் போலீஸ் ஸ்டேஷனில் புகார் தெரிவித்த போது, புகாரை பெற முடியாது என, திருப்பி அனுப்பி விட்டனர். என் குழந்தைக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.கோவை அரசு மருத்துவமனை 'டீன்' அசோகன் கூறியதாவது:குழந்தை, திருச்சி அரசு மருத்துவமனையில் பிறந்தபோது, 700 கிராம் எடை தான் இருந்தது. சிறப்பு பிரிவில் கண்காணித்து, தீவிர சிகிச்சை அளித்துள்ளனர். பின், பல்வேறு மருத்துவமனைகளில் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 2018 ஜூலை, 11ல், கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.குழந்தைக்கு 'பேக்ட் செல் (ரத்த அணுக்கள்)' மட்டும் ஏற்றப்பட்டது. 'பிளாஸ்மா செல்' மூலம் தான் எச்.ஐ.வி., தொற்று பரவும். 'பேக்ட் செல்' மூலம்பரவ வாய்ப்பு இல்லை. 'பேக்ட் செல்' இருந்த உறையின் சீரியல் எண்ணை, மீண்டும், வேலுார் பரிசோதனை கூடத்துக்கு அனுப்பி சோதனை செய்யப்பட்டுள்ளது. ரத்தம் அளித்த கொடையாளரிடமும் சோதனை செய்ததில், அவருக்கு எச்.ஐ.வி., தொற்று இல்லை. பல்வேறு மருத்துவமனைகளில் குழந்தைக்கு சிகிச்சை அளித்ததால், குழந்தைக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம். குழந்தைக்கு, தற்போது ஏ.ஆர்.டி., மையத்தில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.இவ்வாறு, அவர் கூறினார்.